ஆம் ஆண்டு கொண்டு வந்து, சாதாரண விவசாயிகள் எல்லோரும் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தங்களுடைய நெல்லை விற்பனை செய்வதற்கு வழிவகை செய்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் நெல் வரத்து, சாகுபடி ஆகியவற்றை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஆங்காங்கே, தேவைக்கேற்ப, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்துகொள்ளலாம் என்ற உத்தரவினையும், அனுமதியினையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கவுள்ளார்கள். ஆய்வின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ.ப.பா. பரமசிவம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

வீட்டுமனைப் பட்டா

***2559—டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தாப்பட்டி கிராமத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், திருக்கூர்ணம் கிராமம், (உட்கடை சீத்தாப்பட்டி) நத்தம் புல எண்.532/3 மொத்த விஸ்தீரணம் 0.35.44

ஹெக்டேர் காலியிடம் புறம்போக்கில் 7 நபர்கள் வீடுகட்டி குடியிருந்து வருகின்றார்கள். ஊராட்சியின் தீர்மானம் பெற்று, விதிமுறைகளுக்குட்பட்டு, வீட்டுமனை ஒப்படை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ.ப.பா. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துடிக்கின்ற ஏழைகளின் விழி நீர் துடைக்கவே, கண்ணிமை துஞ்சாது உழைக்கின்ற கருணைப் பெட்டகம்! சங்கத் தமிழ் பூமிக்காக, (மேசையைத் தட்டும் ஒலி) சந்தனமாய்க் கரைகின்ற சத்தியத்தின் சொரூபம்! இருபத்தோராம் நூற்றாண்டில் இமை விரிந்து வியந்தே எழுதுகிற இதிகாசம் எங்கள் இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தாப்பட்டி கிராமத்தில் வசிக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைச் சொல்லி, எங்களுடைய தொகுதியிலே கடந்த 1977 ஆம் ஆண்டு வந்த பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 200–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேடசந்தூர் தாலுகா, பாலப்பட்டி ஊராட்சி, புது அழகாபுரி என்ற கிராமத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின்மூலமாக அரசிடமிருந்து பெறப்பட்ட 20 ஏக்கர் உபரி நிலத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். பின்பு, அவர்களுக்கு சிறப்பு அரசாணை வழங்கி, அதன்மூலம் 100 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. மீதமுள்ள 60–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீட்டுமனைப் பட்டாக்களை இன்னும் பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில உச்சவரம்புச் சட்டத்தின்மூலம் மிகை நிலத்தை அரசு எடுத்ததிலிருந்து சிலருக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்ற தகவலையும், மீதமுள்ளவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தகுதியிருப்பின், ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ.ப.பா. பரமசிவம் அவர்கள்.

முற்பகல் 10—35

டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைத் தேடி மக்கள் என்ற சூழ்நிலையை மாற்றி, மக்களைத் தேடி அரசு என்ற மகத்தானதொரு (மேசையைத் தட்டும் ஒலி) வியத்தகு புரட்சியை வருவாய்த் துறையிலே ஏற்படுத்தித் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைப் பதிவு செய்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதியில் அடங்கிய கோட்டூர், கோவிந்தராஜபுரம், மல்லிகைப் பூ நகர், திடீர் நகர், ஓடை மாநகர், தாமோதரபுரம் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் குடியிருப்பு, ஆதம்பாக்கம் பகுதியிலே, சாஸ்திரி நகர், தரமணி பகுதியிலே, பாரதி நகர் மற்றும் கானகம் பகுதிகளில் மக்கள் பல வருடங்களாக வாழ்ந்து வருகிறார்கள். வீட்டு வரி, குடிநீர், மின் இணைப்பு ஆகியவற்றுக்கான கட்டணங்களைச் செலுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு, அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடத்தை வழங்குவதே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உறுதியான, நிலையான கொள்கையாகும் என்பதைத் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன். எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கெல்லாம் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைகளை ஒப்படை செய்து, வருவாய்த் துறை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்து வருகிறது. வருவாய் நிலை ஆணை எண் 21—ன்கீழ் வரையறைக்குட்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன வேளச்சேரியிலே கூட, கடந்த ஐந்தாண்டுகளிலே பல முறை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, நானே அப்போதிருந்த சட்டமன்ற உறுப்பினரோடு நேரடியாகச் சென்று வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலே, வருவாய் நிலை ஆணை எண் 21—ன்கீழ் வரையறைக்குட்பட்டு இருக்குமானால், தகுதி இருக்குமானால், புரட்சித் தலைவி இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு செய்து, உடனடியாக அதை வழங்குவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றிச் சின்னம், அறிஞர் அண்ணா கண்ட சின்னம் உதய சூரியன். (மேசையைத் தட்டும் ஒலி) சங்கராபுரம் தொகுதிக்கு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞரும், இளைஞர் அணியினுடைய வெள்ளுடை வேந்தன் அண்ணன் தளபதி அவர்களும் கண்ட வேட்பாளர் உதயசூரியன். இந்த மன்றத்திற்கு நான்காவது முறையாக வெற்றி பெறச் செய்த சங்கராபுரம் தொகுதி*

2016 ஆகஸ்ட் 17]

மக்களுக்கும், எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட கழக நிருவாகிகளுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உடைமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட நிலங்களுக்கு அரசால், உரிய தொகை வழங்கப்பட்ட பிறகும், நலிவுற்ற மக்களுக்கு மனைகள் அளந்து கொடுக்கப்படாமல் இருக்கின்றன. சங்கராபுரம் தொகுதியிலுள்ள கரடிசித்தூர் ஊராட்சியிலும், சின்ன சேலம் ஒன்றியத்திலுள்ள தகரை மற்றும் குரால் ஊராட்சிகளிலும் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. சின்ன சேலம் ஏற்கெனவே தொகுதியாக இருந்தபோது நான் அந்தத் தொகுதி உறுப்பினராக இருந்திருக்கிறேன். அது இப்பொழுது பிரிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி தொகுதியாக இருக்கிறது. மேற்சொன்ன இந்த மூன்று ஊராட்சிகளிலும், நிலங்கள் அளக்கப்பட்டு, மனைகள் ஒதுக்கப்பட்டு, பயனாளிகளும் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு இன்னும் பட்டாக்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, நீண்ட நாட்களாக பட்டா கொடுக்கப்படாமல் இருக்கிற மக்களுக்கு பட்டா கொடுப்பதற்கும், மனைகளை அளந்து கொடுப்பதற்கும் வழிவகை செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியெல்லாம் வாய்ப்புக் கேட்கக்கூடாது. கையைத் தூக்குங்கள் போதும். உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற விழுப்புரம் மாவட்டத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், இதுவரையில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு 44,590 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழையெளியோர்களுடைய வாழ்விலே ஒளியேற்றியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை இங்கே வைத்தார்கள். ஒன்று, வீட்டுமனை வழங்கியவர்களுக்கு அளந்து வழங்கப்படவில்லையென்றும், மற்றொன்று, அளந்து தயாராக இருக்கின்ற வீட்டுமனைகளை வழங்க வேண்டுமென்றும் கோரிக்கைகளை வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல் சரியான தகவலா என்று தெரியவில்லை. ஏனென்றால், இப்பொழுது 44,590 பேர்களுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், முறையாக ஆய்வு செய்து, (குறுக்கீடு) அளந்து முடித்து தயாராக இருக்கிறது, இன்னும் வழங்கப்படவில்லை என்று நீங்கள்தான் சொல்கிறீர்கள். வழங்கியதற்கு அளவு எடுக்கப்படவில்லையென்றும் நீங்கள்தான் சொல்கிறீர்கள். ஆக இரண்டும் முரண்பட்ட கருத்தாக இருக்கிறது.

முற்பகல் 10—40

பொதுவாக வீட்டுமனைகளை வழங்குகிறபோது, உரிய அளவுகளை எடுத்தவுடன், அந்தப் பயனாளிகளை அழைத்துச் சென்று, அடையாளம் காட்டி, அங்கே குடியிருப்பவர்களுக்கு வரன்முறைப்படுத்திதான் வழங்கப்படுகிறது. ஆகவே, நீங்கள் சொன்ன அந்த நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையிலே, விழுப்புரம் மாவட்டத்தில் 44,590 பேர்களுக்கு தயாராக இருக்கின்ற வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்களோ, அதைப்போல், தகுதியுள்ள அனைவருக்குமே மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் வழங்குவார்கள். ஏனென்றால், இந்த நிதிநிலை அறிக்கையிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் 3½ இலட்சம் ஏழையெளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் அடங்கும். தகுதி இருப்பின், ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.